1980 பிப்ரவரி 7]

நெல்லை மாவட்டத்தில் நிருபர்களுக்கு மனைப்பட்டாக்கள்.

*வினா எண் 83— திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) நெல்லை மாவட்டத்தில் நிருபர்களுக்கு இலவச மனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில் எத்தனை பேருக்கு வழங்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: (அ) & (ஆ) நெல்லை மாவட்டத்தில் நிருபர்களுக்கு இலவசமாக மனைப் பட்டா வழங்கப்படவில்லை. ஆனால் 10 நிருபர்களுக்கு 22 தவணைகளில் காலக் கிரையத் தொகை (Market Value) செலுத்த வேண்டும் என்ற நிபந்தனையின் பேரில் தற்காலிக உரிமங்கள் வழங்கப்பட்டுள்ளன. இவர்களில் ஒருவர் மனைக்கான முழுக் கிரயத்தையும் செலுத்தி விட்டபடியால் அவருக்கு மனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளது.

திரு. சோ. அழகர்சாமி: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கூறும்போது 10 பேர்களுக்கு மனைப் பட்டா வழங்கப்பட்டதாகவும், அதற்கு விலை நிர்ணயிக்கப்பட்டு பணம் வழங்கியதாகவும் சொன்னார்கள். எந்த ஊரிலே இந்த மனைப் பட்டா வழங்கப்பட்டது? என்ன கிரயம் ஒரு மனைக்கு போடப்பட்டிருக்கின்றது என்பதை அறிய முடியுமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டத்தில் மனைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. மனைக் கிரயம் மார்க்கெட் வேல்யூபடி போடப்பட்டிருக்கின்றது.

நிலவரி முதலியவைகளுக்கான ரசீதுகள்.

*வினா எண் 84—டாக்டர் கே. சமரசம்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கிராம அதிகாரிகள் வசூலிக்கும் நிலவரி, நீர் வரிக்கான ரசீதுகளை தமிழில் எழுத அரசு நடவடிக்கை ஏதும் எடுத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : (அ) & (ஆ) கிராம அதிகாரிகள் ஏற்கனவே தமிழில் உள்ள ரசீதுகளைத்தான் உபயோகப்படுத்துகிறார்கள்.

கிராமங்களில் பயன்படுத்தப்படும் எல்லாப் படிவங்களும் பதிவேடுகளும் இப்போது தமிழில்தான் உள்ளன. அதில் ரசீது புத்தகமும் அடங்கும். ரசீது புத்தகம் தமிழில் இருப்பதால் கிராம அதிகாரிகளும் தமிழில்தான் ரசீது எழுதுவார்கள் என நம்பப்படுகிறது. அதற்கென தனியே உத்தரவு ஏதும் பிறப்பிக்கப்படவில்லை.

டாக்டர் கே. சமரசம் : பேரவைத் தலைவர் அவர்களே, கிராம அதிகாரிகள் பயன்படுத்துகின்ற ரசீதுகளில், வட்டாட்சி, கோட்டாட்சி அலுவலகங்களிலிருந்து தரப்படுகின்ற ரசீதுகள் இனிமேலாவது தமிழில் அச்சடிக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, எல்லாமே தமிழில் வரவேண்டுமென்பதற்காகத் தான் இன்றைக்குத் தமிழில் எழுத வேண்டுமென்று அதிகாரிகளுக்குச் சொல்லியிருக்கிறோம். குறிப்பாக, பிர்க்கா என்பதற்குப் பதில் சரகம், வருவாய் சரகம் என்றும் தாலுகா என்பதற்குப் பதில் வட்டம், வருவாய் வட்டம் என்றும், அதேபோல் வருவாய் கோட்டம் என்றும் எழுத வேண்டுமென்று உத்தரவு போட்டிருக்கிறது.

திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம் : சார், கிராம முன்சீப்புகளால் கொடுக்கப்படுகின்ற ரசீதுகளிலே அந்த நிலத்தின் நெம்பர் போடப்படுவதில்லை. அதனால், தவறு ஏற்படுவதற்கு ஏதுவாக இருக்கிறது. ஆகவே, அந்தத் தவறுகளை நீக்குவதற்கு இனி அந்த ரசீதுகளில் சர்வே நெம்பர்களைப் போடுவதற்கு இந்த அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கிராம அதிகாரிகள் நீண்டகாலமாக இப்படிச் செய்துகொண்டு வந்ததாகத் தெரிகிறது. அதைப் போக்குவதற்கு $2\frac{1}{2}$ ஆண்டுகளாக எவ்வளவு முடியுமோ, அவ்வளவு முயற்சிகளும் செய்துகொண்டிருக்கிறோம். இன்னும் பல சீர்திருத்தங்கள் செய்ய நீங்களும் உதவி கரமாக இருக்க வேண்டும்.

1980 பிப்ரவரி 7]

திரு. க. மருதாசலம்: பேரவைத் தலைவர் அவர்களே, கிராம அதிகாரிகள் தமிழில் அச்சடித்த ரசீது கொடுப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்த அச்சடித்த ரசீது தராமலேயே, வெள்ளைக் காகிதத்தில் எழுதிக் கொடுத்து வருகின்றார்களே, அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க இந்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 9.20]

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: குறிப்பிட்ட பெயர்களைச் சொன்னால் அவர்கள் மேல் நடவடிக்கை எடுக்க முயற்சி செய்யப்படும்.

டாக்டர் கே. சமரசம்: பிர்க்கா, தாலுகா என்பதைச் சரகம் வட்டம் என்று மாற்றுவதைப் பற்றி மட்டும் சொல்லவில்லை எந்த வரி விதித்திருக்கிறோம், என்ன வரி விதித்திருக்கிறோம், என்பதைத் தமிழில் தெளிவாக எழுதாத காரணத்தால். 50 காசு 1 ரூபாய் என்று போட்டு ஏமாற்றி வாங்கும் முறை இருக்கும் காரணத்தால் அதை எல்லாம் தமிழில் தெளிவாக எழுதுவதற்கான வழிவகைகளை அரசு ஆராயுமா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: எல்லாமும் எல்லா இடங்களிலும் தமிழில்தான் நடக்கிறது. 1963-64 ஆம் ஆண்டில் சில கிராமங்களில் ஆந்திர மாநிலத்திலிருந்து சேர்க்கப் பட்டிருக்கின்றன. அங்கு தமிழ் தெரியாமல் தெலுங்கிலே எழுதி வருகிறார்கள். இப்போதுதான் அந்தப் பகுதிகள் எல்லாம் முறைப்படி நம்முடைய மாநிலத்திலே சேர்க்கப்பட்டிருக்கின்றன. தமிழிலே எல்லா இடங்களிலும் கொண்டு வர எல்லாவிதமான முயற்சிகளும் மேற்கொள்ளப்படும்.

திரு. என். பழனிவேல்: கிராமதிகாரிகள் தங்களுடைய வேலைகளை அவர்களுடைய வீடுகளையே அலுவலமாக வைத்து செயல்படுகிறார்கள். இதனால் விவசாயிகளுக்குப் பெரிய சிரமம் ஏற்படுகிறது. அவர்களிடத்திலே பணிந்து போகும் தன்மையும் ஏற்படுகிறது, ஆகவே, அவர்களுக்கு முறையான அலுவலகங்கள் கட்டிக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: நிதிநிலை சரியாக இருந்தால் அதைப் பற்றி அரசு யோசிக்கும்.

திரு. வி. கோ. சின்னசாமி: ரசீது புத்தகத்தில் பல விவரங்கள் இருக்கின்றன. அந்த விவரங்கள் அத்தனையும் பூர்த்தி செய்யப்படுவதில்லை. அப்படிப் பூர்த்தி செய்யப்படாததன்

காரணமாக பல தவறுகள் ஏற்படச் சந்தர்ப்பம் ஏற்பட்டு மீண்டும் வசூலிக்கும் சந்தர்ப்பங்கள் எல்லாம் ஏற்படுகின்றன. அதைத் தடுக்கும் முறையில் விவரங்கள் அத்தனையும் பூர்த்தி செய்யப்பட வேண்டுமென்று உத்தரவிடப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : இப்படிப்பட்ட குறைபாடுகள் நீண்ட பலகாலமாக இருந்து வருகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அந்தக் குறைபாடுகளை நீக்குவதற்காகத்தான் நில அளவை மேம்பாட்டுத் திட்டம் என்று இந்த அரசு இப்போது கொண்டு வந்திருக்கிறது. அந்தத் திட்டப்படி கிராமங்களில் இருக்கும் கூட்டுப் பட்டாக்களைத் தனிப் பட்டா ஆக்கவும, ரசீதுகளில் தேவையானவற்றை முறைப்படி பூர்த்தி செய்ய வேண்டுமென்பதற்கும் இந்த அரசு முறையான நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டிருக்கிறது.

திரு. வி. கோ. சின்னசாமி ; ஒருசில மிகவும் வசதி படைத்தவர்கள் ஊரில் பெரியவர்கள் என்று கருதப்படுகிறவர்கள் சில பேர் கிராம முன்சீபுகளாக இருப்பவர்கள் மணியக்காரர் என்று வேறு ஒருவரை நியமித்து வசூலிக்கிறார்கள். அப்படிப்பட்ட கிராமாதிகாரிகளை மாற்றி கிராம மக்களுக்குத் தொடர்புடையவர்களை நியமிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : கிராமாதிகாரிகளானாலும் சரி, மாவட்ட ஆட்சித் தலைவரானாலும் சரி, வருவாய் அதிகாரியானாலும் சரி அவர்களுக்கு எங்கே வேலை இருக்கிறதோ அங்கேதான் தங்கவேண்டும், குடியிருக்க வேண்டுமென்று அரசு உத்தரவு போட்டிருக்கிறது. அந்த உத்தரவை மீறி யாராவது நடப்பார்களானால் விவரம் தெரிவித்தால் நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. மு. ஜான் வின்சென்ட் : ஜாயின்ட் பட்டா என்ற முறையில் ஒருவருடைய பெயருக்குப் பட்டா வழங்கப்பட்டு, பின்னர் பல பேருக்குக் கிரையம் செய்யப்பட்ட பின்பும் கிராம அதிகாரிகள் வரி வசூலிக்கிறார்கள் என்ற புகார் அரசுக்கு வந்துள்ளதா ? அதன் பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : அப்படிப்பட்ட கூட்டுப் பட்டா இருப்பதால்தான் சங்கடம் என்று அதைத் திருத்த இப்போது நில மேம்பாட்டுத் திட்டம் கொண்டு வரப்பட்டு 28 வட்டங்களில் வேலை நடந்து கொண்டிருக்கிறது. எல்லா வட்டங்களிலும் விரைவில் அந்தப் பணி நடைபெற்றால் இந்தக் குறைபாடு நீக்கப்படும்.